# இந்தப் பூமியில் மிகவும் குளிரான நகரமான யக்கூத்தியாவில் வாழும் முஸ்லிம்கள்

## லத்தீப் பாரூக்

ரஷ்யாவின் கீழ் வரும் ஷக்ஹா அல்லது யக்கூஸா குடியரசின்; தலைநகரம் தான் யக்கூட்ஸ் அல்லது யக்கூத்தியா நகரம். இந்தப் புவியில் மிகவும் குளிரான நகரம் இதுவேயாகும். சக்ஹா குடியரசு என்றும் அழைக்கப்படும் யக்கூஸா குடியரசு ரஷ்யாவின் தூர கிழக்கு பிராந்தியத்தில் ஆக்டிக் சமுத்திரத்தை அண்மியதாக அமைந்துள்ளது. இதன் சனத்தொகை வழித்தோன்றலில் முஸ்லிம்கள் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். 2019ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் படி யக்கூஸா உட்பட ரஷ்யாவின் ஆக்டிக் பிராந்தியத்தில் முஸ்லிம்களின் சனத்தொகை வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது.




**உறை நிலையில் வாழும் மக்கள்**

யக்கூஸா ஒரு சிறிய சனத்தொகையைக் கொண்ட நாடு. இங்குள்ள ஒவ்வொரு நபரும் அந்தப் பிரதேசத்துக்கு ஏதோ ஒரு வழியில் புதிதாக வருகை தந்தவர்கள். அந்த வகையில் வேகமாக மாற்றம் கண்டு வரும் சமூக-பொருளாதார சூழலில் முஸ்லிம்கள் மற்றவர்களோடு வேகமாக இரண்டறக் கலந்து விட வசதியாக உள்ளது.

அதற்காக முஸ்லிம்கள் இங்கு எந்த கவலைகளுக்கும் முகம் கொடுக்கத் தேவையில்லை என்று அர்த்தமல்ல. வழமைபோல் தமது இஸ்லாமிய அடையாளங்களை வெளிப்படுத்துகின்ற போது நகர அதிகாரிகள் மற்றும் உள்ளூர் வாசிகளிடம் இருந்து அவர்களுக்கு தொல்லைகள் எழவே

செய்கின்றன. உதாரணத்துக்கு இங்குள்ள மக்களோடு ஒருங்கிணைந்து ஒரு முஸ்லிமாக தம்மை அடையாளப்படுத்தி வாழ்வதற்கு அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. காரணம் இந்த பிரதேசமும் அதன் மக்களும் மிக நீண்ட காலமாக சமயச்சார்பற்ற போக்கினைப் பின்பற்றுகின்றவர்கள். இந்தப் போராட்டம் இன்னும் அங்கு முடிவடையவில்லை. அங்கு வாழும் முஸ்லிம்கள் தமக்கென ஒரு பள்ளிவாசலை நிர்மாணித்துக் கொள்ள முயன்ற போது அதற்கு அங்கே கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 1996ல் யக்கூஸாவில் முதலாவது பள்ளிவாசலை நிர்மாணிக்க முழுக்க முழுக்க முஸ்லிம்களினதும் முஸ்லிம் முதலீட்டாளர்களினதும் பங்களிப்பிலேயே அவர்கள் தங்கி இருக்க வேண்டியதாயிற்று.

கடந்த காலங்களில் இந்தப் பள்ளிவாசல் விஸ்தரிக்கப்பட்டு 2012ல் உலகின் ஆக்டிக் பிராந்தியத்தின் மிகப் பெரிய பள்ளிவாசல் என்ற பெயரையும் பெற்றுக் கொண்டது.



**யக்கூஸா பள்ளிவாசலின் அழகிய தோற்றம்**

அங்கு வாழும் போதிய வசதியற்ற முஸ்லிம்கள் கூட தமது வசதிக்கு ஏற்ற வகையில் சிறிய அளவிலான பங்களிப்புக்களைக் கூட இதற்கென வழங்கி உள்ளனர். தற்போது முழு வடிவம் பெற்றுள்ள அந்தப் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை மற்றும் பெருநாள் தொழுகைகளுக்கு சுமார் ஐயாயிரம் பேர் கூடும் வகையில் அமைந்துள்ளது. இங்குள்ள இன்னொரு தென் பகுதி நகரமான நிர்யாங்கிரி நகரிலும் பள்ளிகளும் தொழுகை நடத்தும் இடங்களும் உள்ளன. இங்கிருந்து இஸ்லாமிய இதழ் ஒன்றும்; வெளிவருகின்றது.

ரஷ்யாவின் ஆக்டிக் பிராந்திய பள்ளிவாசல்களைப் பற்றிப் பேசும் போது நோர்ட் கமால் பள்ளியைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. நோரில்ஸ் நகரில் அமைந்துள்ள இந்தப் பள்ளவாசல் தான் உலகில் மிகவும் தூரமான வட முனையில் அமைந்துள்ள பள்ளியாகும்.

கட்டிட வடிவமைப்பு ரீதியாக மத்தியில் ஒரு மினாரத் கோபுரத்துடன்; இது துருக்கி கட்டிட கலையின் அடிப்படையில் அமைந்துள்ளது. நோரில்ஸ் நகரின் சனத்தொகையில் மத்திய ஆசியாவின் அஸர்பைஜான், தாத்தாரியர்கள், செச்னியா, கிரிகிஸ்தான், கஸகிஸ்தான், உஸ்பகிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய இடங்களில் இருந்து வந்து குடியேறிய இஸ்லாத்தை தழுவிய ரஷ்யர்களுக்கு அப்பால் மூன்றில் ஒரு பங்கினர் முஸ்லிம்கள்.



**நகர வீதிகள்**

இங்கு ஹலால் உணவு தாராளமாகக் கிடைப்பதில்லை. இந்தப் பிரச்சினையை சமாளிக்க பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளிவாசலும் இறக்குமதித் துறையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் வர்த்தகர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளன. இவர்கள் ஹலால் இறைச்சி வகைகளை இறக்குமதி செய்து பள்ளிவாசல்கள் மூலமாக முஸ்லிம் குடும்பங்களுக்கு தனிப்பட்ட முறையில் விநியோகித்து வருகின்றனர்.

புனித றமழான் மாதத்திலும் ஆக்டிக் பிரதேச மக்கள் பிரத்தியேகமான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது. இந்தப் பிரதேசம் கோடை காலத்தில் ஒரு வகையான பிரச்சினைக்கும் குளிர் காலத்தில் இன்னொரு வகையான பிரச்சினைக்கும் மாறி மாறி முகம் கொடுக்கும் ஒரு பகுதியாகும். கோடை காலத்தில் 24 மணி நேரத்தில் மிகக் குறைவான அளவு இருள் நேரத்தை அல்லது முற்றாக இருள் இல்லாத நிலையைக்

கொண்டிருக்கும். அதேபோல் குளிர் காலத்தில் பகல் வெளிச்சம் என்பது முற்றாக இருக்காது அல்லது மிகக் குறைவாகவே இருக்கும். எனவே சூரிய ஒளியின் தாக்கத்தைக் கொண்டு நோன்பு நோற்பதற்கான கால அவகாசத்தைக் கணித்துக் கொள்வது மிகவும் கஷ்டமான விடயமாக இருக்கும்.

இவ்வாறான காலப் பகுதியில் சமய ரீதியான நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகள் வழங்கியுள்ள தீர்ப்புகளின் படி மூன்று வகையான முடிவுகளுக்கு வரலாம். ஒன்று அவர்கள் குறிப்பிட்ட றமழான் மாத காலப்பகுதியில் நோன்பு இருப்பதால் மிகவும் பாரதூரமான செயல்முறை ரீதியான சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது தடைகள் ஏற்படுமாயின், அதே ஆண்டில் காலநிலை கைகொடுக்கக் கூடிய வசதியான ஒரு மாதத்துக்கு நோன்பு வைப்பதைப் பின்போடலாம். இரண்டாவதாக அவர்கள் தமக்கு மிக அருகில் வசிக்கும் முஸ்லிம் சமூகம் பின்பற்றுகின்ற காலநேரத்தைப் பின்பற்றலாம் அது நள்ளிரவு சூரியன் பிரச்சினைக்கு முகம் கொடுக்காததாக இருக்க வேண்டும். மூன்றாவதாக அவர்கள் புனித மக்கா நகரில் பின்பற்றப்படும் கால நேரத்தைப் பின்பற்றலாம்.

பகல்நேர வெளிச்சம் நீடிக்கும் காலப்பகுதியில் இங்குள்ள முஸ்லிம்கள் தமது உள்ளூர் நேரத்தையே பின்பற்றுகின்றனர்.

யக்கூத்தி பரம்பரை பற்றி பேசுகின்ற போது யார் இந்த மக்கள் அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று பலர் வியப்படையலாம். உலகில் இந்த இனத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பது லட்சம் மக்கள் வாழுகின்றனர்.

இந்த மக்கள் கூட்டத்தின் சிறப்பான இயல்புகளில் முக்கியமானது குதிரைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு. இன்னுமொரு பிரிவினர் வேட்டையாடுவதில் சிறப்பு பெற்றவர்கள்.

இதனால் இவர்களது தினசரி உணவில் பால்; பண்ணை உற்பத்திகள் அடங்கி உள்ளமை ஒன்றும் ஆச்சரியமானதல்ல. பசுக்களில் இருந்தும் கலை மான்களிடமிருந்தும் இவர்கள் பாலை பெற்றுக் கொள்கின்றனர். அதேபோல் இவர்களது அன்றாட உணவில் மீன் வகைகளும் முக்கிய இடம் பிடிக்கின்றன.

ஷக்ஹா பிராந்தியத்தின் பிரதான கைத்தொழில்துறை சுரங்கத் தொழிலாகும். இந்தப் பிராந்தியத்தில் பொதிங்துள்ள வைரங்கள் உலக அளவில் அதன் பிரபலத்துக்கு காரணமாகின்றன. உலகின் மிகப் பெரிய வைரச் சுரங்கங்களில் பல இங்குதான் அமைந்துள்ளன. இது தவிர தங்கம், பாதரசம், நிலக்கரி உட்பட இன்னும் பல கனிம வளங்களும் தாராளமாகக் காணப்படுகின்றன.




**தனித்துவம் பேணும் பெண்கள்**

பெரும்பாலான துருக்கியர்கள் முஸ்லிம்களாகக் காணப்பட்ட போதிலும் யாக்கூத் மக்களில் பொரும்பாலானவர்கள் பழமைவாத கிறிஸ்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்த மக்களின் பாரம்பரிய உடைகள் மிருகங்களின் தோல் மற்றும் உரோமத்தால் ஆனவை. மோசமான காலநிலைக்கு ஈடுகொடுக்கும் வகையில் அவை அமைந்துள்ளன. கடந்த காலங்களில் ஒவ்வொரு நிலைமகளிலும் (வேலை செய்தல், பயணம் செய்தல் போன்றன) வெள;வேறு வகையான உடைகள் அவர்களுக்கு உள்ள போதிலும் இந்த உடைகள் இப்போது கொண்டாட்டங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் துருவப் பகுதியின் விரிவான இந்த இஸ்லாமிய வளர்ச்சி இஸ்லாத்தின் இன்றைய பூகோளமயமாக்கலில் ரஷ்யாவின் பாரிய பங்களிப்பு பெரும்பாலும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதையே உறுதி செய்கின்றது. முஸ்லிம் சனத்தொகையின் வளர்ச்சியோடு (உள்ளுர் மற்றும் வெளிநாட்டு) இரண்டாவது தலைமுறை குடியேற்றவாசிகளின் வெளிப்பாடு ரஷ்ய சமூகத்தோடு மிக நன்றாகவே ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. அத்தோடு மிகவும் சுறுசுறுப்பான மத்திய கிழக்கு கொள்கையோடு இஸ்லாத்தின் எதிர்காலத்தில் செல்வாக்கு செலுத்துவதிலும் மதிப்பீடு செயவதிலும் அத்தோடு அதன் ஐரோப்பிய அயலவர்களின் உறவுகளிலும் ரஷ்யா ஒரு சர்ச்சைக்குரிய நாடாகவும் மாறி உள்ளது.

மலர்ந்து வரும் இந்த துருவப் பிரதேச இஸ்லாம் அதன் பாரம்பரிய சமயப் பிரிவுகளில் இருந்து இன்னமும் பூகோள ரீதியாகப் பிளவுபடுத்தப்படவில்லை அல்லது தூரப்படுத்தப்படவில்லை என்பதையே இன்றைய நிலைமை உறுதி

செய்கின்றது. வட கோகஸஸ் மற்றும் வொல்கா ஊரல்ஸ் ஆகிய பகுதிகளைப் போல் சகல நாடுகளினதும் தூர வடக்கு மற்றும் தூர கிழக்கு உட்பட பிரதான நகரங்களில் அது பரவி உள்ளது. ரஷ்யாவின் மிகவும் பின்தங்கிய தென் பகுதி பிராந்தியங்களில் கூட இஸ்லாம் தலைகாட்டி உள்ளது. காண்டி-மான்ஸி மற்றும் யமோலா நெனட்ஸ் சுயாட்சி ஒக்ருக்ஸ் போன்ற சர்ச்சைக்குரிய ரஷ்யப் பிராந்தியங்களைக் கூட இஸ்லாம் விட்டு வைக்கவில்லை. இவ்விரு பகுதிகளும் ரஷ்யாவின் இயற்கை வாயுக்கான இருதயப் பிரதேசங்கள் என்பதம் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் அர்த்தம் ரஷ்யாவின் எதிர்காலத்துக்குள் பதிக்கப்பட்ட ஒன்றாக இஸ்லாம் மாறி உள்ளது என்பதேயாகும். அந்த வகையில் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கிய ஒரு விடயமாகவும் அது உள்ளது.

ரஷ்ய அதிகாரபீடத்தைப் பொருத்தளவில் இந்த மாற்றமானது தமது உள்ளூர் சிறுபான்மையினருக்கு இஸ்லாத்தை ஒரு மார்க்கமாக வெளிக்காட்ட வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. விரிவான ஒரு சமூக போக்கிற்கு அல்லது மனமாற்றத்துக்கு உரிய ஒரு விடயமாக இஸ்லாத்தை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டி உள்ளது. நகர சமூக நிலைமைகளை மீள வடிவமைத்தும், நாட்டின் தொழிற்படையோடு இரண்டறக் கலந்தும் மாற்றங்களுக்கு வழிவகுக்கும் ஒரு மார்க்கமாக இஸ்லாத்தை அவர்கள் பார்க்க வேணடி உள்ளது. அந்த வகையில் ஆக்டிக் பிராந்திய நகரங்கள் ரஷ்யாவில் ஏற்பட்டு வரும் மாற்றங்களில் முன்னணியில் திகழ்கின்றன. அதி உயர் மட்ட உணர்திறன் கொண்ட அடிமட்ட இயக்கவியல் மற்றும் இந்த சமூக மாற்றங்களின் நெகிழ்வுப் போக்கு என்பனவற்றோடு இணைந்ததாக இந்த செயற்பாடுகள் அமைந்துள்ளன. **(முற்றும்)**